மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையில் உள்ள மாவட்ட மைய நூலகம் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு உரியதாகும். இம்மாவட்ட மைய நூலகத்தை சிவகங்கையிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றி அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

408—

வெளி மாநிலங்களிலுள்ள தமிழக கைத்தறி விற்பனை நிலையங்கள்

* 9029— திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ள தமிழக கைத்தறி விற்பனை நிலையங்கள் தொடர்ந்து நஷ்டத்தில் செயல்படுவதால் அவற்றை மூடிவிடுவது குறித்து அரசு ஆய்ந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெளி மாநிலங்களில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு நிறுவனம் என அழைக்கப்படும் கோ-ஆப்டெக்ஸ் 175 இடங்களில் கிளை விற்பனை நிலையங்களை நிறுவி இயங்கி வருகிறது. அவற்றில் பெங்களூர். நாக்பூர், ஜாம்நகர், தாமரைச்சேரி, பாட்னா-2 ஆகிய ஐந்து இடங்களில் நடத்தி வந்த கிளை விற்பனை நிலையங்களில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால் 31-3-1992 உடன் மூடப்பட்டு விட்டன.

412—

கருக்கை காலனி ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள்

* 9885—திரு. ஆர். தங்கராசு:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கருக்கை காலனி ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?